# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண்.9/2022–2023

## கூட்டப் பொருள்கள்

**1.** ஆணையர் அவர்களின் செப்டம்பர்–2022 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.165/2021/சி1)

**தீர்மான எண். 485 பதிவு செய்யப்பட்டது.**

**2.** ஆணையர் அவர்களின் அக்டோபர்–2022 மாத நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.165/2021/சி1)

**தீர்மான எண். 486 பதிவு செய்யப்பட்டது.**

**3.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் செப்டம்பர் –2022 ஆம் மாதத்திற்கான பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்த விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிறப்பு | 181 | 171 | – | 352 |
| இறப்பு | 95 | 77 | – | 172 |

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3675/2022/எச்3)

**தீர்மான எண். 487 பதிவு செய்யப்பட்டது.**

**4.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் அக்டோபர் 2022 ஆம் மாதத்தில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்த விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிறப்பு | 78 | 85 | – | 163 |
| இறப்பு | 49 | 44 | – | 93 |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3675/2022/எச்3)

**தீர்மான எண். 488 பதிவு செய்யப்பட்டது.**

**5.** காஞ்சிபுரம் மாநகராட்சி தொடர்புடைய சார்பு நீதிமன்றம், முன்சீப் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம், உயர் நீதிமன்றம், சென்னை, உச்ச நீதிமன்றம், புதுடில்லி மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் ஆகிய நீதிமன்றங்களில் இம்மாநகராட்சிக்கு எதிராக தொடுக்கப்படும் வழக்குகளில் சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜராகிடும் வழக்கறிஞர்களுக்கான வாதுரை கட்டணம் சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களால் வழங்கப்படும் பட்டியலின் அடிப்படையில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.3967/2019/எப்1)**

**தீர்மான எண். 489 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தமிழ்நாடு அவசர சட்டம் எண்.2, நாள்.20.10.2021 அரசிதழ் எண்.494, நாள்.21.10.2021-ன்படி காஞ்சிபுரம் பெருநகராட்சியினை 21.10.2021 முதல் காஞ்சிபுரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம் பெருநகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து, தற்போது பணியாற்றி வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் காஞ்சிபுரம் மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்து கொடுத்துள்ள விருப்பக் கடிதங்கள் மற்றும் பணியாளர்களின் பதவிகளுக்கு இணையாக மாநகராட்சி பணியில் உள்ள பதவி மற்றும் ஊதிய விவரங்கள் அடங்கிய விவரப் பட்டியல் (வ.எண்.1 முதல் 274 நபர்கள்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டு நகரமன்ற தீர்மானம் எண்.338, நாள்.31.12.2021 இல் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் திரு.S. செல்வராஜ், உதவியாளர் தனது விருப்பக் கடித்தில் நகராட்சிப் பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்து கொடுத்துள்ள கடிதம் மாநகராட்சிப் பணியில் தொடர்வதற்கான பட்டியலில் வ.எண்.7 இல் சேர்க்கப்பட்டுள்ளது.

எனவே, திரு.S. செல்வராஜ், உதவியாளர் நகராட்சிப் பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதால், மாநகராட்சி பணியில் தொடர்வதற்கான பணியாளர்களின் பட்டியலில் வ.எண்.7 இல் உள்ள இவரது பெயரினை நீக்கம் செய்தும், நகராட்சி பணிக்கு செல்வதற்கான பணியாளர்களின் பட்டியலில் வ.எண்.13 இல் சேர்க்கவும், இது குறித்த விவர அறிக்கையினை உரிய வழிமுறையாக அரசுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.14051/2021/சி1)**

**தீர்மான எண். 490 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** காஞ்சிபுரம் பெருநகராட்சி 21.10.2021 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 20 மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) காஞ்சிபுரம் மாநகராட்சி உட்பட, அந்தந்த மாநகராட்சிகளின் மக்கள் தொகைக்கேற்ப அளவுகோல் நிர்ணயம் செய்து, ஒரே சீராக புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல், ஏற்கனவே உள்ள பணியிடங்களை மறுசீரமைத்தல் மற்றும் முறைப்படுத்தி அரசாணை (நிலை) எண்.152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.7) துறை, நாள்.20.10.2022 வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.14051/2021/சி1)**

**தீர்மான எண். 491 பதிவு செய்யப்பட்டது.**

**8.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.23, அறிவிப்புகள் 2022-23ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் 19.04.2022 ம் தேதிய ந.க.எண்.7628/22/E2 எண்ணிட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை 2022-23 அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி தரம் உயர்த்தப்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு நவீன புதிய அடுக்கு மாடி கட்டிடம் கட்ட தனியார் நிறுவனம் மூலம் (Consultant) விரிவான திட்ட அறிக்கை ரூ.14.40 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு திட்ட மானியம் ரூ.10.00 கோடி போக, மீதமுள்ள தொகை ரூ.4.40 கோடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **(ந.க.எண்.1600/2022/இ1)**

**தீர்மான எண். 492 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**9.** அம்ரூத் 2.0 திட்டம் 2022-23 கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியில் வார்டு எண்.10 உப்பேரிகுளம் மற்றும் வார்டு எண்.46-ல் ஓரிக்கை ஏரி சீரமைப்பு செய்யும் பணிக்கு 21.10.2022-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை தினசரி நாளிதழில் வெளியிட இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை-9 அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு முரசொலி (தமிழ்) மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா (ஆங்கிலம்) நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான விளம்பர கட்டணம் ரூ.69615/- வழங்கக் கோரி "Vipras Adz", சென்னை என்ற விளம்பர நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. இச்செலவினத் தொகை வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.11750/2021/இ1)**

**தீர்மான எண். 493 அனுமதி அளிக்கப்பட்டது.**

**10.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து வகையான சேவைகள் குறித்து பொது மக்கள் தங்களது புகார்களை மாநகராட்சி அலுவலகத்திற்கு கட்டணம் இல்லா தொலைபேசியில் தெரிவிக்கவும், மற்றும் இணையதளம் மூலம் தெரிவிக்கவும் வழிவகை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி புகார் விவரம் உடனுக்குடன் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர்களுக்கு அனுப்ப Message Server மூலம் குறுஞ்செய்தி அனுப்ப TRAI மூலம் அனுமதி பெற நடைமுறைபடுத்தப்பட உள்ளது. இணையதள வாயிலாக புகார்கள் குறித்து சேவை அளிக்க புதிய இணையதளம் Kancheepuram Corporation.in என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சேவைகளை மாநகராட்சியில் பெறுவதற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | DLT Registration Fees | – | 5900/– (ஒரு வருடம் வரை) |
| 2 | Godaddy – Domain Registration (kancheepuram Corporation,in) | – | 1200/– (ஒரு வருடம் வரை) |
| 3 | Godaddy – Web hosting (Websites based source) | – | 2300/– (ஒரு வருடம் வரை) |
| 4 | MSG 91 (SMS Charges) | | 4750/– (ஒரு வருடம் வரை) |
| | **மொத்தம்** | | **16150/–** |

மேற்கண்ட விவரப்படி தொடர்புடைய நிறுவனங்களுக்கு Online மூலம் தொகை செலுத்துவதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 494 அனுமதி அளிக்கப்பட்டது.**

**11.** இம்மாநகராட்சியில் காங்க் மஸ்தூராகப் பணிபுரிந்த திரு. எம். காத்தவராயன் என்பவர் 31.03.2004–இல் ஓய்வு பெற்று கொடு ஆணை எண்.16669 M. இந்தியன் வங்கி கணக்கு எண்.411620473–ல் ஓய்வூதியம் பெற்று வந்த பின்பு 08.10.2013–ல் காலமாகி விட்டார். அவரது மனைவி திருமதி.கே. குணபூஷனம் என்பவர் 12.08.1999–இல் காலமாகி விட்டர். அன்னாரின் மகன் திரு. கே. பாபு என்பவர் கண் பார்வையற்ற நிலையில் குடும்ப வாழ்நாள் ஓய்வூதிய பயன்கள் வழங்க கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.4992/2022 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை ஆஜராகி வழக்கு நடத்திட ரூ.15000/– சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P. சீனிவாஸ் என்பவருக்கு வழக்கு கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.4333/2022/P1)**

**தீர்மான எண். 495 அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள Legacy Waste குப்பைகளை அளவீடு செய்து அதன் அறிக்கை அளிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.19001/2022/SBM–1, நாள்.18.07.2022–ல் கோரியுள்ளதின் படி, இந்நகர் பகுதியில் வையாவூர், திருவீதிபள்ளம் மற்றும் நத்தப்பேட்டை பகுதியில் உள்ள Legacy Waste நிறுவனம் மூலம் அளவீடு செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மேயர், அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.6130/2022/இ1)**

**தீர்மான எண். 496 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**13.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.28–ல் வேகவதி நதி சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அங்கன்வாடி கட்டிடம் அமைத்திடும் இடத்தில் மின்கம்பம் மற்றும் கம்பி வடத்தினை மாற்றி அமைத்திட ரூ.63,200/–ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :–**

பணியின் அவசர அவசியத்தை கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**(ந.க.எண்.291/2022/இ1 )**

**தீர்மான எண். 497 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**14.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41 விசாலாட்சி நகர் பகுதியில் பொதுமக்கள் தங்கள் குடியிருப்பிற்கு தேவையான வசதிகள் செய்யும் பொருட்டு சிறுபாலம் அமைத்து தருமாறு கோரியுள்ளனர். எனவே மேற்படி பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.50 இலட்சத்தில் 50 சதவிகிதத்தை அப்பகுதி மக்களின் பங்களிப்பு தொகையாக பெற்று தருவதாக மாமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே ரூ.3.50 இலட்சத்தில் பொது நிதியில் செலவு செய்து இப்பணியினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 498 அனுமதி அளிக்கப்பட்டது.**

**15.** தமிழக அரசின் தலைமை செயலாளர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தமிழகம் முழுவதும் கொரோனா மற்றும் ஓமிக்ரான் பெருந்தொற்று அதிகரித்து வந்த காலத்தில் நோய்த்தொற்று ஏற்பட்ட பகுதிகள், வீடுகள், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், தினசரி சந்தைகள் மற்றும் அரசு மருத்துவமனை வளாகங்கள் போன்ற இடங்களிலும் திடக்கழிவு மேலாண்மை பணியின் போது கழிவுகளை அப்புறப்படுத்திய போது கிருமி நாசினி பணிகள் மேற்கொள்ள அவசியம் என்பதால் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளீச்சிங் பவுடர், நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் வாங்கி வழங்கியதற்கும் மற்றும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் | மதிப்பீடு ரூ. | விநியோகம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு (10 டன்) | 7.00 இலட்சம் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஏஜென்சி, மறைமலைநகர். |
| 2 | பிளீச்சிங் பவுடர் (20 டன்) | | |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1325/2022/எச்1)**

**தீர்மான எண். 499 பதிவு செய்யப்பட்டது.**

**16**. காஞ்சிபுரம் மாநகராட்சி திருப்பாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து காஞ்சிபுரம் நகருக்கு குடிநீர் அனுப்பப்பட்டு சுமார் 70% குடிநீர் தேவையை பூர்த்தி செய்யப்படுகிறது. அங்குள்ள யூனிட் –3, 60HP வெர்டிகல் டர்பைன் பம்பு செட்டின் உள்ள 200MM விட்டம் கொண்ட காளம் பைப் (Column Pipe) முற்றிலும் துருபிடித்து பழுதடைந்து ஒட்டையாகி நீரேற்றம் செய்ய இயலாத நிலையில் இக்காளம் பைப் மீண்டும் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. இவை பொருத்தப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது.

எனவே பம்பின் காளம் பைப் 200mm விட்டம், 1.50 நீளம் கொண்ட 11 எண்கள் முழுவதுமாக மாற்றி அமைக்க தோராய செலவினம் ரூ.3.60 இலட்சம் ஆகும். மாநகராட்சிக்கு தொய்வின்றி குடிநீர் சீராக வழங்கவும் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொள்ளவும் ஆகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1002/2022/இ1)

**தீர்மான எண். 500 அனுமதி அளிக்கப்பட்டது.**

**17**. காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இம்மாநகர பகுதியில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை அகற்ற காம் அவிடா, பூனே என்ற நிறுவனம் மூலம் பராமரிப்பு முறையில் 7 காம்பாக்டர் லாரிகள் மற்றும் 1 ஹூக் லோடர் லாரிகள், பயன்படுத்தப்பட்டு தற்போது 07.09.2022 அன்று இந்நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் முடிவடைந்துவிட்டது. தற்போது பொது சுகாதாரப்பிரிவில் உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வாகனங்களை இயக்க போதுமான ஓட்டுநர்கள் இல்லை. எனவே, துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளபடி அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி உரக்குடில்கள், உரக்கிடங்கிற்கும் மறுசுழற்சி பணிக்கு நத்தப்பேட்டை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளதாலும், மேற்படி காம் அவிடா நிறுவனத்தில் பணிபுரிந்த ஓட்டுநர்களில் 8 ஓட்டுநர்களை மட்டும் தினக்கூலி அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022–23 ம் ஆண்டில் விலை விவர பட்டியலின் படி (Schedule of rate) ரூ.445/– நாள் ஒன்றுக்கு என்ற வீதம் 08.09.2022 முதல் 89 நாட்களுக்கு தோராயமாக ரூ.3.20 இலட்சம் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் இச்செலவினத்தை மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான பட்டியல் தொகை பொது நிதியிலிருந்து வழங்கியதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களை இயக்க போதுமான ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனம் மூலம் இயக்கப்பட்ட வாகனங்களுக்கு அதே ஓட்டுநர்களில் 8 ஓட்டுநர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் நியமித்து மாவட்ட ஆட்சியர் 2022–23ம் ஆண்டு விலை விவரப்படி பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவினத்திற்கும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 7690/2022/எச்1)

**தீர்மான எண். 501 அலுவலக குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது.**

**18.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தமிழகம் முழுவதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும் தமிழக அரசு செயலாளர் அவர்களின் அறிவுரையின்படியும் "நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்" எனும் திட்டத்தில் நமது நகரத்தினை தூய்மையான நகரமாக வைத்துக்கொள்ள இத்திட்டம் கடந்த ஜீன் மாதம் 3ம் தேதி நாடு முழுவதும் துவங்கப்பட்டு, மாதத்தில் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் பட்டியலில் தெரிவித்தள்ளதன்படி பூங்காக்கள், குளங்களில் சுற்றியுள்ள பகுதியினை தூய்மை செய்தல், பிரதான சாலைகளை தூய்மை செய்தல், பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை குறித்து பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப் போட்டி, ஸ்லோகன் போட்டி போன்றவற்றை இரண்டாம் மற்றும் நான்காம் வாரம் சனிக்கிழமையில் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தில் தன்னார்வலர்கள் (NGO'S) பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், NCC. NSS. SCOUT மாணவர்கள், பொது மக்கள் என அனைவரையும் ஈடுபடுத்தி தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நிகழ்ச்சிகளை பொது மக்களுக்கு தெரியப்படுத்தவும் விழிப்பணர்வு ஏற்படுத்தவும் பேனர்கள் வைக்க, தூய்மை பணிகள் மேற்கொள்ள வரும் பொது மக்கள், தன்னார்வலர்களுக்கு, NSS, NCC மாணவர்களுக்கு வழங்க கையுறைகள், முககவசம் போன்றவை தேவைப்படுகிறது.

மேலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கிட வேண்டியுள்ளதால், தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண். 8363/2022/எச்1)**

**தீர்மான எண். 502 அனுமதி அளிக்கப்பட்டது.**

**19.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 24, சாலையோர கடைகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம் 2022–2023 முதல் 2024–2025 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 13.10.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்தார்கள். வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | **குத்தகை இனம் எண்** | **குத்தகை விவரம்** | **ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1 | 24 | சாலையோர கடைகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம் | K.S. வேல்முருகன்<br>7A/17, S.V.N. பிள்ளை தெரு, காஞ்சிபுரம். | 15,50,000/– |
| | | | J. வரதராஜன்<br>அப்பாராவ் தெரு, காஞ்சிபுரம். | 12,20,000/– |

மேற்படி பணிக்கு மூன்று முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வராததாலும், துறை மூலம் வசூல் மேற்கொள்வதால் குறைவாக வசூல் ஆவதாலும், மேலும் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இரசீது புத்தகங்கள் அச்சிடும் கூலி போன்ற செலவினங்கள் ஏற்படுவதாலும், வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு வரபெற்ற இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. K.S. வேல்முருகன் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.15,50,000/– மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளதாலும், மேற்படி பணியை 14.10.2022 முதல் மேற்கண்ட குத்தகையை ஒப்படைப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை உரிமை ஒப்படைத்தற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.12900/2020/அ1)**

**தீர்மான எண். 503 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**20.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 4, மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமை 2022–2023 முதல் 2024–2025 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 28.09.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு அளித்துள்ளார்கள். வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் எண் | குத்தகை விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 4 | மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமை | கே.எஸ். வேல்முருகன் 7A/17, S.V.N. பிள்ளை தெரு, காஞ்சிபுரம். | **10,50,000/–** |
| | | | R. வினோத்குமார். 12A/1, புதிய எண்.31./1, வைகுண்ட பெருமாள் கோயில் சன்னதி தெரு, காஞ்சிபுரம். | **12,00,000/–** |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.R. வினோத்குமார் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.12,00,000/– மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளதால், அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

இவ்வினத்தின் உரிமை மார்ச் 2020–ல் கொரோனா நோய் தொற்றால் தமிழக அரசு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் நஷ்டம் ஏற்பட்டு குத்தகைதாரர் குத்தகையினை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் இருந்து பல முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அரசு மதிப்பிற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர 2020–ம் ஆண்டு முதல் இன்று வரை எவரும் ஏலம் கோர முன்வராத காரணத்தினாலும், மாநராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் பணி மேற்கொள்வதால், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இரசீது புத்தகங்கள் அச்சிடும் கூலி ஆகியவற்றை கணக்கிடும்போது திரு. R. வினோத்குமார் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி அதிகமாக உள்ளதாலும், நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குத்தகைதாரருக்கு குத்தகை ஒப்படைத்தற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.12900/2020/அ1)**

**தீர்மான எண். 504 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**21.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் எண்.6 ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (சாணம், குப்பை முதலியன உட்பட) 2022–2023 முதல் 2024–2025 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 28.09.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்தார்கள் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் எண் | குத்தகை விவரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 6 | ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (சாணம், குப்பை முதலியன உட்பட) | M. அஷ்ரப் அலி, 11C, தர்கா காம்பவுண்ட், செங்கழுநீரோடை வீதி, காஞ்சிபுரம். | 1,95,000/– |
| | | | M. முஹம்மத் இம்தியாஸ், 24 S.V.N. பிள்ளை தெரு, காஞ்சிபுரம். | 2,00,000/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு M. முஹம்மத் இம்தியாஸ் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.2,00,000/– மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளதாலும், அரசு மதிப்பைவிட கூடுதலாக உள்ளதாலும், திரு. M. முஹம்மத் இம்தியாஸ் அளித்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை உரிமை ஒப்படைத்ததற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.12900/2020/அ1)**

**தீர்மான எண். 505 அனுமதி அளிக்கப்பட்டது.**

**22.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் 23.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்த ஒருமாத காலத்திற்கு வாடகை அடிப்படையில் 8 எண்ணிக்கையிலான டிராக்டர் உடன் கூடிய டிரெய்லர் வாகனம் (ஓட்டுனர், டீசல் மற்றும் இதர செலவுகளுடன் உட்பட) சப்ளை செய்யும் பணி | 7.00 | M/s.R.R Service, Arakkonam | ரூ.2950/- (ஒரு வண்டிக்கு ஒரு நாளைக்கு) |
| | | | M/s.The Walajapet Agro Engineering & Service Co-Operative Centre Ltd., | ரூ.3050/- (ஒரு வண்டிக்கு ஒரு நாளைக்கு) |

**அலுவலக குறிப்பு :-**

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியத்தை கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 506 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**23.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் திருப்பாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து குடிநீர் வேகவதி நீரூந்து நிலையம் வந்தடைந்து நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும் பாலாறு–ஓரிக்கை தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. மாநகராட்சியின் குடிநீர் தேவையை சுமார் 70 சதவீதம் இந்நீரேற்று நிலையங்கள் மூலமாக பூர்த்தி செய்யப்படுகின்றது. இங்குள்ள மின்மோட்டார்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து இயக்க வேண்டியது அவசியமாகின்றது. இந்நீரேற்று நிலையங்களில் இருந்த பணியாளர்கள் பணி ஓய்வு போன்றவற்றால் போதிய பணியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் இந்நீரேற்று நிலையங்களை இயக்குவது மிகவும் கடினமான சூழ்நிலையில் உள்ளது. ஆகவே இந்நீரேற்று நிலையம் மற்றும் நீரூந்து நிலையங்களை இயக்க தற்போதுள்ள நிரந்தர மின்பணியாளர்களை தவிர்த்து இந்நீரேற்று நிலையங்களை இயக்க நகராட்சி நிர்வாக இயக்குநரக ந.க.எண். 21787/2021/EA2 நாள். 21.10.2021 ல் உள்ள அளவுகோளின்படி தற்போதுள்ள நிலையில் கீழ்காணும் மின்பணியாளர்கள் தேவைபடுகின்றனர்.

| பணியிடம் | பதவி | தேவையான எண்ணிக்கை |
|---|---|---|
| திருபாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையம் | மின் பணியாளர் நிலை – II | 2 |
| பாலாறு – ஓரிக்கை தலைமை நீரேற்றும் நிலையம் | மின் பணியாளர் நிலை – II | 2 |
| வேகவதி நீரூந்து நிலையம் | மின் பணியாளர் நிலை – II | 2 |
| | **மொத்தம்** | **6** |

எனவே மேற்கண்ட பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) பணி அமர்த்தி கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.19.70 இலட்சம் ஆகும். பணியின் அவசியம் கருதி மேற்படி பணியை வரும் ஓராண்டிற்கு (டிசம்பர் 2022 முதல் நவம்பர் 2023 வரை) (மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ2)**

**தீர்மான எண். 507 அனுமதி வழங்கப்பட்டது.**

**24.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 ல் 09.07.2022 அன்று மாமன்ற உறுப்பினர் இடைத் தேர்தல் நடைபெறவுள்ள, தியாகி நடுநிலைப்பள்ளியில் 4 எண்ணிக்கை வாக்கு சாவடி மையங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டது. எனவே மேற்கண்ட பள்ளியில் அடிப்படைதேவைகளான சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், கதவு ஜன்னல் பழுது பார்த்து அவற்றிற்கு வர்ணம் பூசுதல், மர தடுப்புகள், நான்கு மையங்களிலும் குழல் விளக்குகள், மின் விசிறிகள், சுவிட்சு பாக்ஸ், சிசிடிவி கேமரா, சேர், ஜெனரேட்டர் மற்றும் இரண்டு பள்ளி அறைகளில் மேற்புறம் தார் சீட், மராமத்து பணிகள், முன்புற குடிநீர் தொட்டி, கைப்பம்பு, தரை, டேபிள் மின் விசிறி வாடகை அடிப்படையில் வழங்குதல் முதலிய பணிகள் மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ள கால அவகாசம் இல்லாததால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு.S. ஏழுமலை என்பவர், மூலம் பணி மேற்கொண்டமைக்கும் அளவுப்புத்தகம் எண்.54/2022–23 ன் படி மொத்த செலவுத் தொகை ரூ.8,30,353/–ஐ வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 508 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**25.** காஞ்சிபுரம் மாநகராட்சி வார்டு எண்.1, அரக்கோணம் சாலையில் நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் மாநகராட்சிக்கு சொந்தமான இரண்டு ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அகற்றி, புதியதாக அமைக்க வேண்டி உள்ளது.

எனவே குடிநீர் விநியோக அத்தியாவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மாநகராட்சிக்கு சொந்தமான இடம் போதுமான அளவு இல்லாத காரணத்தில் அருகில் உள்ள ஜமாத்திற்கு சொந்தமான இடத்தில் மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. இதற்கு ஜமாத் மூலம் எவ்வித ஆட்சபேனை இல்லை என சம்மத கடிதம் கொடுத்துள்ளனர்.

ஆதலால் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பணியினை ஜமாத் (ஒலிமுகமதுபேட்டை லெப்பை ஜீம்ஆ மஸ்ஜித் சுன்னத் வல் ஜமாஅத்) சொந்தமான இடத்தில் இரண்டு ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் அமைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு மேற்கண்ட ஜமாத்திற்கு சொந்தமான இடத்தில் பணியினை செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 509 அனுமதி வழங்கப்பட்டது.**

**26.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பாதாளசாக்கடை அமைப்பில் அடைப்பு நீக்கும் பணியின்போது 22.10.2010ல் மரணமடைந்த திரு.K. சுந்தர்ராஜ் அவர்களின் வாரிசுதாரரும் மனைவியுமான Tmt. ராதா, 30/64, பங்காரம்மன் தெரு, சின்னகாஞ்சிபுரம் அவர்களுக்கு உச்ச நீதிமன்ற பேராணை எண். 583/2003 நாள். 27.03.2014 ல் தெரிவித்துள்ளப்படி இழப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம் மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டு 13.04.2015 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி Tmt. ராதா W/o சுந்தர்ராஜ் என்பவர் தனக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.W.P. 19757/2011 (ம) MP. No.01/2011 க்கு 08.03.2022 ல் ரூ. 5.00 இலட்சம் வழங்கப்படவேண்டும் என தெரிவித்து 08.03.2022 தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தீர்ப்பாணையின் மீது உரிய கருத்துரு கோரி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P. ஸ்ரீநிவாஸ், அவர்களுக்கு 29.07.2022 ம் தேதிய கடிதம் வாயிலாக சட்ட கருத்துரு வழங்கக் கோரியதில் ஏற்கனவே வழங்கிய இழப்பிடு தொகை ரூ.10.00 இலட்சம் குறித்து உயர்நீதிமன்றத்தில் நகராட்சியின் சார்பில் வழக்கறிஞர் மூலம் விவரம் தெரிவிக்காததால் மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் 18.03.2022 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை

மறு பரிசீலனை செய்யக் கோரி மீள மாநகராட்சியின் மூலம் மனு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்து வழக்கு கட்டணமாக ரூ.25000/– வழங்கவும் கோரியுள்ளார்.

எனவே மேற்படி வழக்கிற்கு திரு.P. ஸ்ரீநிவாஸ், சென்னை உயர் நீதிமன்றம் மறு பரிசீலனை செய்ய மனு செய்து வழக்கிற்கு ஆஜராகவும், வழக்கு கட்டணம் ரூ.25000/– வழக்கறிஞருக்கு வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க. எண்.8285/2010/இ1)**

**தீர்மான எண். 510 அனுமதி வழங்கப்பட்டது.**

**27.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25–ல் வசித்து வரும் திருமதி.R. மலர்விழி, கதவு எண்.19, சி.என். அண்ணாதுரை தெரு, சின்ன காஞ்சிபுரம் என்பவர் தனது குடியிருப்பு வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள புதைவடிகால் இணைப்பு (விதிப்பு எண்.008/039/00087) வணிக உபயோகமாக கேட்பு எழுப்பப்பட்டுள்ளதாகவும், அதன் குடியிருப்பு கட்டணம் தொகை ரூ.8400/– அதனை குடியிருப்பிற்குண்டான கேட்பாக மாற்றித்தரக் கோரி மனு செய்துள்ளார்கள். வரப்பெற்ற மனுவின் மீது சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் பொருத்துனர் ஆகியோரின் நேரடி ஆய்வில் குடியிருப்பாக உள்ளதாக தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்படி வீட்டிற்கு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள வணிக உபயோக கேட்பு வித்தியாசம் ரூ.7280/– ஐ கூடுதலாக எழுப்பப்பட்டுள்ள கேட்பு தொகையினை ரத்து செய்து (அரசு வழிகாட்டுதலின்படி) குடியிருப்பு பயன்பாட்டிற்குண்டான கேட்பாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 . மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2 தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள வணிக பயன்பாட்டினை குடியிருப்பு பயன்பாடாக மாற்றி கேட்பு எழுப்பி தொகை வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2650/2022/இ4 4)**

**தீர்மான எண். 511 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**28.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் வசித்து வரும் திரு.K. மோகனமுருகன், கதவு எண்.31, புதுப்பாளையத் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் என்பவர் தனது குடியிருப்பு வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள புதைவடிகால் இணைப்பு (வரி விதிப்பு எண். 008/017/00310) வணிக உபயோகமாக கேட்பு எழுப்பட்டுள்ளதாகவும், அதன் கட்டண தொகை ரூ.47,117/– அதனை குடியிருப்பிற்குண்டான கேட்பாக மாற்றித்தரக் கோரி மனு செய்துள்ளார்கள். வரப்பெற்ற மனுவின் மீது சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் பொருத்துனர் ஆகியோரின் நேரடி ஆய்வில் குடியிருப்பாக உள்ளதாக தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். மேலும் (2004–2023 வரை புதைவடிகால் வணிக பயன்பாட்டில் ரூ.47,117/– வீதமும், 2012–2023 வரை புதைவடிகால் குடியிருப்பு பயன்பாட்டில் ரூ.15,210/– வீதமும் வருகிறது. எனவே மேற்படி வீட்டிற்கு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள வணிக உபயோகம் கேட்பு வித்தியாசம் ரூ.31,907/–ஐ குடியிருப்பு நீக்கம் செய்து (அரசு வழிகாட்டுதலின்படி) குடியிருப்பு பயன்பாட்டிற்குண்டான கேட்பாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள வணிக பயன்பாட்டினை, குடியிருப்பு பயன்பாடாக மாற்றி கேட்பு எழுப்பி தொகை வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 13638/2022/இ4)**

**தீர்மான எண். 512 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**29.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25ல் வசித்து வரும் திரு.G. வேதாசலம், கதவு எண்.32, சி.என். அண்ணாதுரை தெரு, சின்ன காஞ்சிபுரம் என்பவர் தனது குடியிருப்பு வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள புதைவடிகால் இணைப்பு (விதிப்பு எண்.008/34162) வணிக உபயோகமாக கேட்பு எழுப்பட்டுள்ளதாகவும், அதன் குடியிருப்பு கட்டணம் தொகை ரூ.5400/- அதனை குடியிருப்பிற்குண்டான கேட்பாக மாற்றித்தரக் கோரி மனு செய்துள்ளார்கள். வரப்பெற்ற மனுவின் மீது சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் பொருத்துனர் ஆகியோரின் நேரடி ஆய்வில் குடியிருப்பாக உள்ளதாக தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்படி வீட்டிற்கு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள வணிக உபயோக கேட்பு வித்தியாசம் ரூ.4740/-ஐ கூடுதலாக எழுப்பப்பட்டுள்ள கேட்பு தொகையினை ரத்து செய்து (அரசு வழிகாட்டுதலின்படி) குடியிருப்பு பயன்பாட்டிற்குண்டான கேட்பாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள வணிக பயன்பாட்டினை, குடியிருப்பு பயன்பாடாக மாற்றி கேட்பு எழுப்பி தொகை வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.7307/2022/இ4)**

**தீர்மான எண். 513 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**30.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34ல் வசித்து வரும் திருமதி.T. லட்சுமிபிரியா கதவு எண். 31 பள்ளிக்கூடத்தான் தெரு, காஞ்சிபுரம் என்பவர் தனது குடியிருப்பு வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள புதைவடிகால் இணைப்பு (வரி விதிப்பு எண். 008/021/00562) வணிக உபயோகமாக கேட்பு எழுப்பட்டுள்ளதாகவும், அதன் கட்டண தொகை ரூ.40617/- அதனை குடியிருப்பிற்குண்டான கேட்பாக மாற்றித்தரக் கோரி மனு செய்துள்ளார்கள். வரப்பெற்ற மனுவின் மீது சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் பொருத்துனர் ஆகியோரின் நேரடி ஆய்வில் குடியிருப்பாக உள்ளதாக தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். மேலும் (2012-2023 வரை புதைவடிகால் வணிக பயன்பாட்டில் ரூ.40,617/- வீதமும், 2012-2023 வரை புதைவடிகால் குடியிருப்பு பயன்பாட்டில் ரூ.8970/- வீதமும் வருகிறது. எனவே மேற்படி வீட்டிற்கு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள வணிக உபயோகம் கேட்பு வித்தியாசம் ரூ.31647/-ஐ குடியிருப்பு நீக்கம் செய்து (அரசு வழிகாட்டுதலின்படி) குடியிருப்பு பயன்பாட்டிற்குண்டான கேட்பாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள வணிக பயன்பாட்டினை, குடியிருப்பு பயன்பாடாக மாற்றி கேட்பு எழுப்பி தொகை வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 14258/2022/இ4)**

**தீர்மான எண். 514 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது**

**31.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட டவுன் சர்வே வார்டு எண்.4 பிளாக்–25 நகரளவு எண். 2018 (ம) 2019 ல் உள்ள ஜவஹர்லால் நேரு சந்தையினை மேம்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் மானிய கோரிக்கை எண்.21 அறிவிப்புகள் 2022–23 ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார்செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறவேண்டி தனியார் நிறுவனம் மூலம் (Consultant) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மொத்த மதிப்பீடு ரூ.5.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு மேலாய்வுக்கு தமிழ்நாடு, சென்னை நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது.

மேலும் மேற்படி திட்ட மதிப்பீடு ரூ.5.00 கோடியில் 50 சதவிகிதம் ரூ.2.50 கோடி 2022–23 கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் கீழ் அரசு மான்யத்திலும் மீதம் 50 சதவிகிதம் ரூ.2.50 கோடியினை நகராட்சி பங்குத்தொகையாக மேற்படி ஜவஹர்லால் நேரு சந்தையினை மேம்படுத்தும்போது அதிலிருந்து கிடைக்கும் கடைகளுக்கான முன் வைப்புத் தொகை, மாத வாடகை மற்றும் ஆண்டு குத்தகைகளின் மூலம் ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

ஜவஹர்லால் நேரு சந்தையினை மேம்படுத்தும் பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.5.00 கோடியில் 50 சதவிகிதம் அரசு நிதியிலிருந்து மானியமாகவும் 50 சதவிகிதம் நகராட்சி பங்களிப்புடனும் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.3307/2022/இ1)**

**தீர்மான எண். 515 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது**

**32.** தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–2023 நிதியாண்டில் காஞ்சிபுரம் செங்கழுநீரோடை வீதியில் ஜவஹர்லால் நேரு மார்க்கெட் மேம்படுத்தும் பணிக்கு அப்பகுதியில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தினை முழுவதுமாக, அப்புறப்படுத்தி அந்த இடத்தில் உத்தேசமாக ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக மார்க்கெட் அமைத்து தருவதற்கு நகரமன்ற தீர்மானத்துடன் விரிவான திட்ட அறிக்கை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 09.09.2022 தேதி காணொளி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் தினசரி நாளங்காடி இடத்தில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக மார்க்கெட் அமைக்க (சந்தை மேம்படுத்தும் பணி) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3307/2022/இ1)**

**தீர்மான எண். 516 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது**

**33.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள **21.10.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | மாநகராட்சி அலுவலக வளாகத்தில் மண்டலம் **1**–க்கான மண்டல அலுவலக கட்டிடம் அமைக்கும் பணி | 9.50 | P. Vijayaragunathan | – | 0.02% |
| | | | G. Lakshmi | 0.55% | – |
| 2 | யாகசாலை தெருவில் (வரி வசூல் மையம்) மண்டலம் **2**–க்கான மண்டலம் அலுவலக கட்டிடம் அமைக்கும் பணி | 9.50 | M/S VTN Groups | – | **0.13%** |
| | | | S. Devarajan | 6.26% | – |
| 3 | விளக்கடி கோயில் தெருவில் மண்டலம் **3**–க்கான மண்டல அலுவலக கட்டிடம் அமைக்கும் பணி | 9.50 | M/S Sankaran Construction | – | 0.06% |
| | | | M. Elangovan | 4.97% | – |
| 4 | செவிலிமேடு பேரூராட்சி அலுவலகம் உட்புறம் கட்டிடத்தில் மண்டலம் **4**–க்கான மண்டல அலுவலக கட்டிடம் அமைக்கும் பணி | 9.50 | M/S VTN Groups | – | 0.18% |
| | | | S. Devarajan | 4.47% | – |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 1001/2022/இ1)**

**தீர்மான எண். 517 அனுமதி வழங்கப்பட்டது.**

**34.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் அம்ரூத் **2.O** திட்டம் **2022–23** கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள **21.10.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.**10**, உப்பேரிகுளம் புனரமைப்பு பணி மேற்கொள்ளுதல் | 52.25 | P. Vijayaragunathan | – | 0.07% |
| | | | G. Lakshmi | 0.95% | – |
| 2 | வார்டு எண். **46**, ஓரிக்கை ஏரி புனரமைப்பு பணி மேற்கொள்ளுதல் | 54.25 | G. Haridass | – | 0.02% |
| | | | M/S RMD Construction | 5.00% | – |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 11750/2021/இ1)**

**தீர்மான எண். 518 அனுமதி வழங்கப்பட்டது.**

**35.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 5, மாநகராட்சி பேருந்து நிலையத்தில் ஒலி பெருக்கி மூலம் பேருந்துகள் புறப்படும் காலத்தை அறிவிப்பதுடன் தனியார் விளம்பரங்களையும் விளம்பரப்படுத்தும் உரிமை 2022–2023 முதல் 2024–2025 ஆம் ஆண்டுவரை குத்தகை உரிமைக்கு 28.09.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு அளித்துள்ளார்கள். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | **குத்தகை இனம் எண்** | **குத்தகை விவரம்** | **ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1 | 5 | மாநகராட்சி பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் பேருந்துகள் புறப்படும் காலத்தை அறிவிப்பதுடன் தனியார் விளம்பரங்களையும் விளம்பரப்படுத்தும் உரிமை | திரு. G. சதீஷ்குமார் 14C, காலாண்டார் தெரு, காஞ்சிபுரம் | 1,49,000/– |
| | | | திரு. த.பேகன் விக்னேஷ் 384A. பிராமனர் தெரு, திருக்காலிமேடு,காஞ்சிபுரம். | 1,50,000/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.த. பேகன் விக்னேஷ் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி ரூ.1,50,000/– மற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட கூடுதலாக உள்ளதால், அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. இவ்வினத்தின் உரிமை மார்ச் 2020–ல் கொரோனா நோய் தொற்றால் தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காரணத்தினால் நஷ்டம் ஏற்பட்டு குத்தகைதாரர் குத்தகையினை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையிலிருந்து பல முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 2020–ம் ஆண்டு முதல் இன்று வரை எவரும் முன்வராத நிலையில் தற்போது மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் திரு. த.பேகன் விக்னேஷ் அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை மாநகராட்சி வருவாய் ஈட்டும் பொருட்டு ஏற்று இதனை சிறப்பினமாக கருதி மாமன்றம் குத்தகை உரிமை வழங்க அனுமதிக்கலாம்.
2. மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட உச்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குத்தகைதாரருக்கு குத்தகை ஒப்படைத்ததற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.12900/2020/அ1)**

**தீர்மான எண். 519 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**36.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.34 காந்தி சாலை, கதவு எண்.45–ல் வசிக்கும் திரு. அப்துல் ரஹீம், அவர்கள் மேற்படி இடத்திற்கு தவறுதலாக குடிநீர் கேட்பு எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து தனது 09.08.2021 கடிதம் மூலம் தெரிவித்ததின் பேரில், மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டதில், அவ்விடத்தில் குடிநீர் இணைப்பு இல்லை துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் 16.03.2012 அன்று குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்யுமாறு மனு அளித்ததின் பேரில், துண்டிப்பு கட்டணமாக ரூ.100/– ஐ சலான் எண்.1152577, நாள்.20.03.2012–ன் படி செலுத்தியுள்ளார். இதன்படி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே 2012–13–ம் ஆண்டில் இருந்து தற்போது வரை எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ள குடிநீர் கேட்பினை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.8371/202/இ5)

**தீர்மான எண். 520 அனுமதி வழங்கப்பட்டது.**

**37.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவில் தேர் திருவிழா நடைபெற்றதை முன்னிட்டு தேர் செல்லும் பாதையில் உள்ள மஞ்சள் நீரோடை பகுதியில் ரத்தினாபாய் கல்யாண மண்டபம் அருகில் இருபுறமும் ஓடையின் பக்க சுவர்கள் உயரம் குறைவாக உள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி வேலி (ம) இரும்பு தடுப்புகள் அமைக்க காவல்துறை மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி பொறியாளரின் 16.05.2022–ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளபடி பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக செய்து முடிக்க வேண்டி உள்ளூரில் விலைப்புள்ளிகள் பெற்று நகராட்சிகள் சட்டம் 1920 பகுதி 15–ன் கீழ் பணி செய்து முடித்தமைக்கும் அதற்கான மொத்த செலவுத் தொகை ரூ.71,560/– க்கு விலை விகிதம் வழங்கிய திருவாளர், மகேந்திரன் சப்ளையர்ஸ், காஞ்சிபுரம் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 521 அனுமதி அளிக்கப்பட்டது.**

**38.** காஞ்சிபுரம் மாநகராட்சி திருப்பாற்கடல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வேகவதி நீருந்து நிலையத்திற்கு வரும் பிரதான குடிநீர் பைப்லைன் பாதையில் அவளூர் ஏரிக்கரை பகுதியில் உள்ள 600 mm இரும்பினால் ஆன Air Valve, Tee Joint பழுதடைந்துள்ளதை சரி செய்து புதியதாக 600 மி.மீ. விட்டமுள்ள M.S. fabricated Tee Pipe, Socket & Spigot பொருத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.80 இலட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. A. அரவிந்தன், அவர்கள் மூலம் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 522 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**39.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொதுப்பிரிவில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox machine-Canon IR 2202N) பழுதுபார்ப்பு பணிகளுக்கு **16.11.2021** ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மாமன்ற தீர்மானம் எண். **201** நாள். **30.11.2021** ல் அனுமதி அளித்துள்ளபடி **03.12.2021** ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு ஓராண்டுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

உதவி கணினி திட்டமிடுபவர், காஞ்சிபுரம் மாநகராட்சி அவர்களின் **11.10.2022** ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளபடி மேற்படி ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளும் நிறுவனம் பராமரிப்பு பணிகளில் Service மட்டுமே பொருந்தும் எனவும் இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள் வாங்கி வழங்குவது பொருந்தாது எனவும் தெரிவித்து நகல் எடுக்கும் இயந்திரத்திற்கு Fusar Unit பழுதடைந்துள்ளதை புதியதாக வாங்கி வழங்குமாறு கேட்டுள்ளார்கள்.

எனவே, உதவி கணினி திட்டமிடுபவர் அவர்களது குறிப்பில் கேட்டுள்ளபடி Fusar Unit உதிரிபாகத்தினை Canon தயாரிப்பு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் நேரடியான விலைவிவரம் கோரியதில் பெறப்பட்ட விலைப்பட்டியல் ரூ.12980 /–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. Canon தயாரிப்பு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைவிவரம் என்பதால் அதனை ஏற்று ரூ. 12980/– (GST உட்படட) செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்.12027 / 2022 / இ1 )**

**தீர்மான எண். 523 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**40.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட விரிவாக்க பகுதிகளில் புதிய தெருமின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 45490/2022/Do1, நாள். **11.05.2022** ம் எண்ணிட்ட கடிதத்தில் கோரியதற்கிணங்க விரிவான திட்ட மதிப்பீடு ரூ. 84.75 இலட்சத்திற்கு தயாரித்து அனுப்பப்பட்டது.

அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க. 18700/2022/CFC–1 நாள். **14.10.2022** ம் எண்ணிட்ட கடிதத்தில் மேற்படி திட்ட மதிப்பீட்டில் புதிய தெருவிளக்குகள் கொள்முதல் செய்து கொள்ளவும், இதனை 2022–23ம் நிதியாண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Untied Grant நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்.11083 / 2021 / இ1 )**

**தீர்மான எண். 524 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**41.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1–10** மற்றும் வார்டு எண். **38–44** வரையிலும் உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சரி செய்து தருமாறு மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எனவே மழைக்காலத்தினை கருத்தில் கொண்டும், பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படா வண்ணம், பாதுகாக்கும் பொருட்டு பள்ளங்களை சீர் செய்யும் பொருட்டு தார் கலவை கொண்டு நிரப்ப வேண்டி உள்ளது.

எனவே தார் கலவை மூலம் பேட்ச் செய்ய வேண்டி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**9.70** இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 525 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**42.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் BOV வாகனங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள 25 எண்ணிக்கையிலான (BOV) பேட்டரி வாகனங்களை பழுதுபார்த்து பராமரித்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 526 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**43.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**11** ல் நடுத்தெருவில் அமைந்துள்ள மேல் பிள்ளையார் பாளையம் பள்ளியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பான் பழுது பார்ப்பு பணி, வீரகாளியம்மன் கோயில் தெரு, கச்சியப்பன் தெரு மற்றும் செங்குந்தர் நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க் பிளாட்பாரம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**1.23** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 527 அனுமதி அளிக்கப்பட்டது.**

**44**. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **46**ல் பழைய காலணி பகுதியில் உள்ள கழிவறையில் மராமத்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**1.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண். 1001/2022/இ2)**

**தீர்மான எண். 528 அனுமதி அளிக்கப்பட்டது.**

**45.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 ல் எஸ்.வி.என்பிள்ளை தெருவில் அமைந்துள்ள மழைநீர் கால்வாயில் முழுவதுமாக மண் மூடி உள்ளதால் மேற்கண்ட மண் முழுவதும் அகற்ற மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.91,000/— க்கு பணியின் அவசர அவசியம் கருதி வெள்ள நிவாரண பணிகளுக்காக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ரமேஷ் அவர்கள் மூலம் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பகுதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 529 பதிவு செய்யப்பட்டது.**

**46.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பூங்காவின் உட்புறம் பெண்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் வருகை புரிவது குறித்த அறிவிப்பு பலகையும், இரங்கசாமி குளம் சேம்பர் சுத்தம் செய்யும் பணி மற்றும் விளக்கடி கோயில் தெரு அருகில் கீரை மண்டபம் பகுதியில் அமைந்துள்ள கிணற்றினை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.57 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. K. ரமேஷ் அவர்கள் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :—

மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 530 பதிவு செய்யப்பட்டது.**

**47.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26—ல் அமைந்துள்ள மகாலிங்கம் நகர், வரதராஜா நகர், கண்ணன் நகர் ஆகிய பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின் படி மேற்படி பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.1000/2022/இ1)

**தீர்மான எண். 531 அனுமதி அளிக்கப்பட்டது.**

**48.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**16** ல் எஸ்.வி.என்பிள்ளை தெருவின் இருபுறமும் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை JCB இயந்திரம் கொண்டு அகற்றிட தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு செலவினம் ரூ. **56000/–** க்கு பணி மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதியும் **தமிழ்நாடு மாவட்ட** நகராட்சிகள் சட்டம் **1920**, பிரிவு **15** ன் கீழ் மேற்கொள்ள மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர். G.கன்ஸ்டரக்ஷன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1001/2022/இ2)**

**தீர்மான எண். 532 பதிவு செய்யப்பட்டது.**

**49.** காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்.27, நத்தப்பேட்டையில் அமைந்துள்ள இரயில் நிலையத்திற்கு காஞ்சிபுரம் பகுதியில் இருந்து செல்லும் இரயில் பயணிகளின் தங்களின் வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தம் செய்து செல்வதால் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. மேலும் பொதுமக்களின் நலன் கருதியும், இம்மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் பொருட்டு, மேற்படி இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய இருசக்கர வாகனம் நிறுத்தும் நிலையம் அமைத்திடவும் அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 533 அனுமதி வழங்கப்பட்டது.**

**50.** அரசாணை (நிலை) எண்.**145**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (MA2) துறை நாள். **14.10.2022**ல் காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை மண்டலம் வாரியாக நவீன LED தெருவிளக்குகளாக மாற்றம் செய்ய தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து (SUIDF) ரூ.**1250.62** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.**27000/2021/WB**, நாள்.**14.10.2022** ல் உரிய கருத்துரு அனுப்ப கோரப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட விவரப்படி மண்டலம் வாரியாக தெருவிளக்குகளை நவீனமயமாக்கம் செய்யவும், நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மண்டலம் I மற்றும் II ல் உள்ள தெரு மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி (4702) | ரூ. 576.79 |
| 2 | மண்டலம் III மற்றும் IV ல் உள்ள தெரு மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி (7574) | ரூ. 673.83 |
| | **மொத்தம்** | **ரூ. 1250.62** |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அரசாணையில் தெரிவித்துள்ளபடி ரூ.**1250.62** இலட்சம் மதிப்பீட்டு தொகையினை கடனாக பெற்றுக் கொள்ளவும் ஆண்டிற்கு 5% வட்டியுடன் **6** ஆண்டிற்கு செலுத்தவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விளக்குகளையும், புதியதாக நிறுவப்படவுள்ள மின் விளக்குகளையும் பணி மேற்கொள்ளும் நிறுவனமே 10 ஆண்டுகளுக்கு இயக்கவும், பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று திட்ட அறிக்கை உரிய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.9720 /2022/இ1)

**தீர்மான எண். 534 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**51.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47ல்,பேராசிரியர் நகர் பூங்காவில் (பகுதி 1 மற்றும் 2) பழுதடைந்த நடைபாதை விளக்குகளை சரி செய்து LED விளக்குகள் பொருத்தவும், பழுதடைந்த கேபில்களை மாற்றி அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.20 இலட்சத்திற்கும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் இம்மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.K. ரமேஷ் அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 535 பதிவு செய்யப்பட்டது.**

**52.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் வார்டு எண்.3 ஜி.கே.மண்டபம் நீரூந்து நிலையத்தின் அருகாமையில் உள்ள மின் வாரிய வயர் மாற்றி அமைக்க இம்மாநகராட்சி மூலம் கோரியதற்கு, உதவி பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல், சிவகாஞ்சி அவர்களிடமிருந்து கேட்பு ரூ.1,12,730/- வரப்பெற்றுள்ளதற்கு கட்டணம் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.8296/2022/இ5)

**தீர்மான எண். 536 அனுமதி அளிக்கப்பட்டது.**

**53.** காஞ்சிபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் திரு. சுந்தர வடிவேலு என்பவர் 15.02.2006 அன்று முதல் தகவல் அறிக்கை பெற்று திரு. தேவராஜ் என்பவருடைய இறப்பு சான்று கோரி 29.06.2022 அன்று காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு எதிர்த்து வழக்கு தொடுத்துள்ளார். வழக்கு எண்.OS. No.40 of 2022 இந்த வழக்கு சம்மந்தமாக இம்மாநகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.A.ராஜீ அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்து நாமா தாக்கல் செய்து பதிலறிக்கையும் வழங்கி வழக்கு நடத்தி கொடுத்துள்ளார். இந்த வழக்கு நடத்தி கொடுத்தமைக்கு கீழ்குறிப்பிட்டுள்ள உரிய சட்டச் செலவு கட்டணம் ரூ. 8000/- (எட்டாயிரம்) மட்டும் வழங்கிட 19.09.2022 அன்று கடிதம் கொடுத்துள்ளார் மாமன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1. வக்காலத்து நாமா, தட்டச்சு கட்டணம், எழுது கட்டணம், ஜெராக்ஸ் மற்றும் இதர செலவுகள் | } | ரூ. 2000/- |
| 2. வழக்கறிஞர் கட்டணம் பதிலறிக்கை தயாரித்த கட்டணம் உள்பட வழக்கு கட்டணம் | } | ரூ. 6000/- |
| மொத்தம் | | ரூ. 8000/- |

மேற்காண் சட்டச் செலவு கட்டணம் ரூ.8000/- மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.5458/2022/எச்3)**

**தீர்மான எண். 537 அனுமதி அளிக்கப்பட்டது.**

**54.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18-ல் அமைந்துள்ள இராணி அண்ணாதுரை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லை என்றும், புதியதாக கழிப்பறை அமைத்து தருமாறு தலைமை ஆசிரியர் அவர்கள் தனது கடிதம் ந.க.எண்.111/2022 நாள். 28.08.2022-ன்படி கோரியுள்ளதை தொடர்ந்து, மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் வழங்கிய அறிவுரை படி மேற்படி கட்டிடத்தின் புதிய கழிப்பிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

**(ந.க.எண்.1001/2022/இ1)**

**தீர்மான எண். 538 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**55.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18-ல் அமைந்துள்ள இராணி அண்ணாதுரை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் Incinerator அமைத்து தருமாறு தலைமை ஆசிரியர் அவர்கள் தனது கடிதம் ந.க.எண்.111/2022, நாள்.28.08.2022-ன்படி கோரியுள்ளதை தொடர்ந்து, மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் வழங்கிய அறிவுரைபடி புதிய Incinerator வாங்கி பொருத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 539 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**56.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27–ல் கன்னிகாபுரம் வேலாத்தமன் கோயில் தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தை பழுதுபார்த்து பராமரித்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 540 அனுமதி அளிக்கப்பட்டது.**

**57.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் அமைந்துள்ள T.K. நம்பி தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின்படி மேற்கண்ட பகுதிக்கு மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.1000/2022/இ1)

**தீர்மான எண். 541 அனுமதி அளிக்கப்பட்டது.**

**58.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கீழ்குறிப்பிட்டுள்ள இப்பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கழிவுநீர் பைப் லைன் அகற்றி மாற்று பாதை அமைக்க 160mm PVC பைப் லைன் கொண்டு மேற்கொள்ளும் பணி. | 1.48 | M/s. Kennz Technologies LLP TM. Chennai – 600 071. |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 542 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**59.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27–ல் நத்தப்பேட்டை பள்ளத்தெரு, நடுத்தெரு, முதலியார் தெரு இரயில்வே சாலை பகுதியில் பழுதடைந்த சிறுபால ங்களை அகற்றி புதியதாக சிறுபாலம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.1001/2022/இ1)

**தீர்மான எண். 543 அனுமதி அளிக்கப்பட்டது.**

**60.** காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் மின்வாரிய சப்ளை, ஜெனரேட்டர் சப்ளைக்கான Change over Switch ல் **31.10.2022** அன்று பழுது ஏற்பட்டு எறிந்துவிட்டது. இதனால் மின்வாரிய சப்ளை முற்றிலும் தடைப்பட்டு ஜெனரேட்டர் சப்ளையிலேயே தொடர்ந்து இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே பழுதான **415**A-4 Pole Change Over Switch புதுப்பிக்கவும், Bas Bar Chamber Service செய்து இயக்கவும் வேண்டியது அவசியமாகின்றது. இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவீனம் ரூ.**18,500/–** ஐ பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15** ன் கீழ் மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s. J.K.Enterprises, Kancheepuram அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.1001/2022/இ2)**

**தீர்மான எண். 544 அனுமதி அளிக்கப்பட்டது.**

**61. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளாட்சி அமைப்புகளின் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்க "வழிகாட்டுதல் குழு" (Steering Committee) அமைப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந. நி. 4) துறை அரசாணை (நிலை) எண் 155 நாள்:26.10.2022 ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 11054/2022/அ1)

**தீர்மான எண். 545 பதிவு செய்யப்பட்டது.**

**62.** மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**14** ல் உள்ள புதுப்பாளையம்நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடத்தில் கூடுதல் பணிகளாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், பெயர் பலகை, மும்முனை இணைப்பு, தீ அணைப்பு கருவிகள், எரிவாயு பைப் லைன் அமைத்தல், ஜன்னல் பகுதிக்கு கிரில் மற்றும் ரெட் அமைப்பு, சமையலறை மேடை, குடிநீர் பைப் லைன் வசதி, மற்றும் மின் வசதி முதலிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15** ன் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**4.80** இலட்சத்திற்கும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.V.பார்த்திபன், என்பவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.1003/2022/இ1)**

**தீர்மான எண். 546 பதிவு செய்யப்பட்டது.**

**63.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் குடிநீர் நீரேற்றும் நிலையம், நீரூந்து நிலையம், கழிவுநீர் நீரேற்றும் நிலையம் மற்றும் மாநகராட்சி அலுவலகத்தில் மின்தடை ஏற்படும் நேரங்களில் தொய்வின்றி பணிகள் மேற்கொள்ளவும் மின் ஆக்கி – ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகின்றது. அவைகள்

1. திருப்பாற்கடல் தலைமை நீரேற்றும் நிலையம் – 200 KVA
2. வேகவதி நீரூந்து நிலையம் – 180 KVA
3. PSK கழிவு நீரேற்றும் நிலையம் – 160 KVA
4. தேனம்பாக்கம் கழிவு நீரேற்றும் நிலையம் – 180 KVA
5. மாநகராட்சி அலுவலகம் – 62.50 KVA

மேற்காணும் ஜெனரேட்டர்களை அவ்வப்போது பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு இயக்க வேண்டியுள்ளது. மேலும் அவற்றில் எதிர்பாராதவிதமாக பழுதுகள் ஏற்படுகின்றது. அப்பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து இயக்குவது அவசியமாகின்றது. எனவே பழுதுகள் சரிசெய்து உதிரிபாகங்கள் புதுப்பித்து இயக்கும் பணிகள் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் மேற்கொள்ள ஓராண்டிற்கு (டிசம்பர் 22 முதல் நவம்பர் 23 வரை) பணிகள் மேற்கொள்ள (பெரிய பழுதுகள் நீங்கலாக) மேற்காணும் ஜெனரேட்டர்களுக்கு உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. குடிநீர் பணி, கழிவுநீர்பணி மற்றும் அலுவலக பணி தொய்வின்றி மேற்கொள்ள மேற்படி பணிக்கும் தொகைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.1001/2022/இ2)**

**தீர்மான எண். 547 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**64.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் நகரங்களின் தூய்மைக்கான தர வரிசைப்பட்டியல் கணக்கெடுப்பு பணி சுவச் சர்வேக்ஷன் 2023 மூலம் நடைபெற்று வருகின்றது. இக்கணக்கெடுப்பில் நகரத்தின் தூய்மை, நகரத்தில் வசிக்கும் பொது மக்களின் தூய்மைக்கான பங்களிப்பு, பொது (ம) சமுதாய கழிப்பறைகளின் தூய்மை, அதன் பயன்பாடு, கழிவறைகள் போன்ற பொது மக்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு நகரங்களின் தூய்மை தர வரிசை தயாரிக்கப்படும், இந்நிலையில் இப்பணிகளில் மக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இப்பணிகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :–

மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 11480/2022/எச்4)

**தீர்மான எண். 548 அனுமதி அளிக்கப்பட்டது.**

**65.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளும் பொது நிதி சார்ந்த பணிகளை 2022 தமிழ்முரசு தீபாவளி சிறப்பு மலரில் 23.10.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கு Kal Publicities (P) Ltd, சென்னை – 4 அவர்களிடம் இருந்து வரப்பட்டுள்ள விளம்பர செலவினப் பட்டியல் படி (CGST & SGST வரிகள் உள்பட) தொகை ரூ.12,000/– (ரூபாய் பண்ணிரெண்டாயிரம் மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.10771/2021/இ1)

**தீர்மான எண். 549 அனுமதி வழங்கப்பட்டது.**

**66.** காஞ்சிபுரம் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் People Movement for Clean Cities Campaign தொடர்பாக மெகா தூய்மை பணிகளும் விழிப்புணர்வு பணிகளும் மாதத்தில் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் மேற்கொள்ளவும், பொது மக்களிடையே Behavioural Change ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்கிய நிறுவனத்திற்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கு மாமன்றம் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | தளவாடப் பொருட்கள் | மதிப்பீடு ரூ. | விநியோகம் செய்த நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | நீல நிற குப்பை பின், பச்சை நிற குப்பை பின், ஒளிரூட்டும் சட்டை, குத்தூசி | 7.90 இலட்சம் | GEE JEY AGENCY, CHENNAI |
| 2 | மலார், தென்னந்துடைப்பம், தகடு, முள்கரண்டி, பிகாசு, அலுமினிய அன்னக்கூடை, மண் தள்ளும் பிரஷ் | 8.50 இலட்சம் | |

**அலுவலகக் குறிப்பு :–**

மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.4116/2022/எச்1)

**தீர்மான எண். 550 பதிவு செய்யப்பட்டது.**

**67.** காஞ்சிபுரம் மாநகராட்சி தொடர்பான சென்னை உயர் நீதிமன்ற வழக்குகளில் இம்மாநகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடவும், வழக்குகளை நடத்திடவும் திரு.R. கோபிநாத், B.A. B.L. சென்னை அவர்களை நியமித்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9573/2022/எப்1)

**தீர்மான எண். 551 அனுமதி அளிக்கப்பட்டது.**

**68.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் கல்வி நிதி மற்றும் பொது நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள **04.11.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**கல்வி நிதி 2022–23**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.28, பட்டாளம் தெரு மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் சமையலறை மற்றும் சமையல் பொருட்கள் வைக்கும் அறை கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 6.00 | M/S. VTN Groups | – | 0.10% |
| | | | S. Devarajan | 11.24% | – |
| 2 | வார்டு எண்.20, காந்தி சாலை ஆரம்ப பள்ளியில் பெண்களுக்கான கழிப்பிட வசதி மற்றும் சுற்றுசுவர் உயர்த்தி அமைத்தல் பணி | 3.00 | G. Kumaresan | – | 0.13% |
| | | | V. Parthiban | 7.47% | – |
| 3 | வார்டு எண்.30, யாகசாலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ஒருமுனை மின் இணைப்பை மும்முனை மின் இணைப்பாக மாற்றி அதற்கான சர்வீஸ் வயர், மீட்டரிங் போர்டு, எர்த், வகுப்பறையில் வயரிங் சுவிட்சுகள், பாக்ஸ்கள் வாங்கி பொருத்தி புதுப்பித்தல் மற்றும் அவை சார்ந்த பணிகளை மேற்கொள்ளுதல் | 2.50 | M/S. Elango Electrical Works | – | 0.29% |
| | | | K. Ramesh | 10.40% | – |
| 4 | வார்டு எண்.32, AKT உயர்நிலைப்பள்ளியில் கழிவறை அமைத்தல் பணி | 2.50 | M/S. Sankaran Construction | – | 0.36% |
| | | | R. Babu | 2.00% | – |
| 5 | வார்டு எண்.32, AKT உயர்நிலைப்பள்ளியில் பள்ளி கட்டிட அறைகளுக்கு டைல்ஸ் பதித்தல் மற்றும் மராமத்து பணி | 9.50 | M/S. Sankaran Construction | – | 0.22% |
| | | | R. Babu | 2.43% | – |
| 6 | வார்டு எண்.32, தும்பவனம் தொடக்கப்பள்ளியில் புதிய கழிவறை அமைத்தல் பணி | 4.00 | M/S. Sankaran Construction | – | 0.88% |
| | | | R. Babu | 9.47% | – |
| 7 | வார்டு எண்.45, காமாட்சி அம்மன் காலணி அரசு தொடக்கப்பள்ளிக்கு கழிவறை அமைத்தல் பணி | 3.00 | K. Srinivasan | – | 0.12% |
| | | | V. Parthiban | 6.58% | – |
| 8 | வார்டு எண். 10, கைலாசநாதர் கோயில் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 4.50 | M. Ravisankar | – | 0.07% |
| | | | S. Amudha | 6.67% | – |
| 9 | வார்டு எண். 51, தேனம்பாக்கம் நடுநிலைப் பள்ளி சத்துணவு கூட புகைபோக்கி பழுதுபார்ப்பு பணி | 1.00 | G. Gnanamuthu | – | 0.20% |
| | | | K. Srinivasan | 8.56% | – |
| 10 | வார்டு எண்.18 ல் அமைந்துள்ள இராணி அண்ணாதுரை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய கழிப்பிடம் கட்டுதல் பணி | 4.50 | M/S. V. P. Works | – | 0.12% |
| | | | K. Saravanan | 5.71% | – |
| 11 | வார்டு எண்.18 ல் அமைந்துள்ள இராணி அண்ணாதுரை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய Incinerator வாங்கி பொருத்திடும் பணி | 0.90 | M/S Sovee Enterprises | – | 0.03% |
| | | | V. Parthiban | 18.28% | – |
| 12 | வார்டு எண். 13, CSM நகராட்சி தொடக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் மற்றும் சமையலறை இருப்பு அறை அமைத்தல் பணி | 7.50 | M/S. VTN Groups | – | 0.11% |
| | | | S. Devarajan | 8.50% | – |

**பொதுநிதி**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண். 1, ஒலிமுகமது பேட்டை அம்பாள் நகரில் புதைவடிகால் பைப் லைன்கள் சரிபார்த்தல் மற்றும் நீரேற்றும் கிணறு அமைத்தல் பணி | 6.00 | B. Ravi | – | 0.08% |
| | | | V. Pugalendhi | 2.85% | – |
| 2 | வார்டு எண்.44 வந்தவாசி சாலை முதல் முருகப்பா சாலை வரை உள்ள இரட்டை கால்வாய் ஓரம் உள்ள அணுகு சாலையை தார்சாலையாக மாற்றி அமைத்தல் | 9.00 | V. Parthiban | – | 0.05% |
| | | | G. Kumaresan | 5.73% | – |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தபுள்ளி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1003/2022/இ2)**

**தீர்மான எண். 552 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**69.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் காம்பாக்டர் வாகனம் (Compactor Lorry) எண்.TN 21 BC 3749 வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்திடும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 10580 /2022/இ2)**

**தீர்மான எண். 553 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**70.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 21 H 2646 Tipper Lorry வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்திடும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.8079/2022/இ2)**

**தீர்மான எண். 554 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**71.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE TN 21 AM 5369 வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு தகுதிச் சான்று புதுப்பித்திடும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.8078/2022/இ1)**

**தீர்மான எண். 555 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

**72.** காஞ்சிபுரம் மாநகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் பதிவு எண்.TN 21 G 0147 –க்கு பழுதுகள் சரி செய்து தகுதிச் சான்று பெற்று தருதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.9349/2022/இ2)**

**தீர்மான எண். 556 அனுமதி அளிக்கப்பட்டது.**

**73.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனம் எண்.TN 21 BL 6608 (Desilting Auto) வாகனத்தினை தகுதிச் சான்று பெற ஏதுவாக வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.49 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.7715/2022/இ2)**

**தீர்மான எண். 557 அனுமதி அளிக்கப்பட்டது.**

**74.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனம் எண். TN 21 BL 6743 (Desilting Auto) வாகனத்தினை தருதிச் சான்று பெற ஏதுவாக வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.49 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.7716/2022/இ2)**

**தீர்மான எண். 558 அனுமதி அளிக்கப்பட்டது.**

**75.** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு 1 முதல் 51 வரையிலான பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் விதமாக பணிகளை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிக பணியாளர்களை மாமன்ற தீர்மான எண்.386, நாள்.30.08.2022–ன்படி முடிவடைகிறது. மேலும் பொது சுகாதாரப்பிரிவில் இன்றியமையாத பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டம் கொரோனா நோய் தொற்று, டெங்கு காய்ச்சல் முதலிய பணிகளின் அவசர அவசியம் கருதி மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்போது 80 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களது 2021–2022 ஆம் ஆண்டு தினக்கூலி விலை விகித அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.370/– வழங்கவும், செப்டம்பர் 28,2022 முதல் 89 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.28.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு அவர்களது மாதாந்திர மதிப்பூதியம் அவரவர் சொந்த வங்கி கணக்கில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :–

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும் பணி செய்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 5220/2016/எச்1)

**தீர்மான எண். 559 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**76.** காஞ்சிபுரம் மாநகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் கடந்த 20/11/2018 முதல் இன்று வரையிலான நாட்களில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ள பணியாளர்கள் (ம) ஆண்டுக்கு ஆண்டு வயது முதிர்வின் காரணமாக பணியாளர்கள் குறைந்து வருவதாலும் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி ந.க.எண் 3001/2017/எச்1 எண்ணிட்ட கடிதத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/S SS Engineer's, Coimbatore நிறுவனத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண் 36/28.06.2019 மற்றும் 27/31.05.2019 மற்றும் 46/30.06.2021 ன் படி தற்போது 350 தூய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி செய்து வருகின்றார்கள். வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற்ற பணியாளர்கள் கணக்கில் கொண்டும், கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மற்றும் பொதுசுகாதார பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாலும், நிரந்தர தூய்மை பணியாளர்கள் குறைவாக உள்ளதால் தூய்மைப் பணிகள் பாதிக்கும் வண்ணம் உள்ளது. பொதுமக்களின் நலன்கருதியும், பொதுசுகாதார நலன்கருதியும் பொதுமக்களை தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கவும், நகரின் தூய்மையினை மேம்படுத்தவும், தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939 பிரிவு 52ன் படியும் தொற்று நோய்கள், 65ன் படியும் அறிவிக்கப்பட்ட கொள்ளை நோய்களிலிருந்து பொதுமக்களை காத்திடவும், ஏதுவாக அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 10.09.2022 இல் வழங்கப்பட்ட பணி உத்திரவு 08.12.2022 அன்றுடன் M/S SS Engineer's, Coimbatore நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு முடிவடையவுள்ளது. மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் Key Perfomance Index வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பாக பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இப்பிரேரணையை எதிர்நோக்கி தற்போது இப்பணியின் அவசரம் அவசியம் கருதி மேலும் 89 நாட்கள் (09.12.2022

முதல் 08.03.2023 வரை) காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும் அதற்குண்டான தோராய ரூ.1.70 கோடி செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3001/2017/எச்1)

**தீர்மான எண். 560 அனுமதி அளிக்கப்பட்டது.**

**77.** காஞ்சிபுரம் மாநகராட்சியானது காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவதோடு மிக வேகமாக வளர்ந்து வரும் மாநகராட்சிகளில் ஒன்றாகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி மக்கள் தொகை 2,32,816 ஆகும். தற்போதைய 2022 ஆம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 2,84,571 ஆகும். இம்மாநகராட்சியானது 36.14 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 51 வார்டுகளை உள்ளடக்கிய மாநகராட்சியாகும். இம்மாநகரில், தோராயமாக 74,887 குடியிருப்புகளும், 5689 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. 'A' வகை பேருந்து நிலையம் ஒன்று உள்ளது. மேலும், தினசரி காய்கறி மார்க்கெட் 2 எண்களும், மீன் மார்க்கெட் 1 எண்களும், பூ மார்க்கெட் 1 எண்களாகும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 100.00 மெ.டன், அளவிற்கு திடக்கழிவுகள் உருவாகின்றது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மாநகரில் உருவாகும் குப்பைகள் மற்றும் கழிவுகள் முறைப்படி தரம் பிரிக்கப்பட்டு, 4 பசுமை உரக்குடில்கள் (MCC) மற்றும் 24 பூங்கா உரக்குடில்கள் மூலம் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 24608/2022/இஏ2, நாள். 21.10.2022 இல் மற்றும் 10.11.2022 இல் அறிவுறுத்தியுள்ளபடி, மாநகரில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும், பேட்டரி வாகனங்கள் மற்றும் LCV எனப்படும் ஆட்டோ வாகனங்களின் மூலம் முதல் நிலை சேகரித்தல் பணி மேற்கொள்ளவும், மாநகரில் உள்ள வணிக நிறுவனங்களில் LCV எனப்படும் ஆட்டோ வாகனங்கள் மற்றும் HCV எனப்படும் டிப்பர் லாரிகள் மூலம் முதல் நிலை சேகரித்தல். மாநகரில் உள்ள பேருந்து செல்லும் முக்கிய சாலைகள் மற்றும் சாதாரண சாலைகள் மற்றும் தெருக்களில் தூய்மைப் பணி மேற்கொள்ளுதல், தினசரி மார்க்கெட், பேருந்து நிலையங்களில் தூய்மைப் பணி மேற்கொள்ளுதல் மற்றும் சாலைகளில் உள்ள முட்புதர்கள் அகற்றுதல் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் உள்ள மண் அகற்றி சுத்தம் செய்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் தேவையான பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் மற்றும் பொது சுகாதார தளவாடப் பொருட்கள் ஆகியவைகளை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்று பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற ஒரு டன் குப்பைகளை மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து சேகரித்து பசுமை உரக்கிடங்கிற்கு மற்றும் மறுசுழற்சி மையத்திற்கு எடுத்துச் செல்வதற்கு உரிய பிரேரணை தயார் செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி, பணியாட்கள் மற்றும் வாகனங்கள் உட்பட ஒரு டன் குப்பைகளை மக்கும் குப்பைகளாக மக்காத குப்பைகளாக தனித்தனியாக சேகரித்து, பசுமை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்ல ஆகும் செலவுத் தொகை ரூ.6256/– என்ற விகிதத்தில் நகரில் ஒரு நாளைக்கு உருவாகும் மொத்த குப்பைகளின் அளவு சுமார் 100 மெட்ரிக் டன் குப்பைகளை ஒரு வருடத்திற்கு திறம்பட கையாள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. பொது சுகாதார அவசியம் கருதி மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில்/திடக்கழிவு மேலாண்மை நிதி (பயனர் கட்டணம்) இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3001/2022/எச்1)**

**தீர்மான எண். 561 அலுவலக குறிப்பின்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

**78.** காஞ்சிபுரம் மாநகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள **28.10.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| | **குடிநீர் நிதி** | | | | |
| 1 | காஞ்சிபுரம் மாநகராட்சிகுட்பட்ட கழிவுநீர் நீரேற்றும் LT பம்பிங் ஸ்டேசன் மற்றும் லிப்டிங் ஸ்டேசனில் உள்ள 4 HP – 2 எண்ணிக்கைகள், 7 HP – 2 எண்ணிக்கைகள் மற்றும் 20 HP – 1 எண்ணிக்கை (Non –Clog Dry Motor Submersible Motor Pumpset) கழற்றி பழுது நீக்கம் செய்து பொருத்தி இயக்கி தரும் பணிகள் மேற்கொள்ளுதல் | 7.60 | M/S. Elango Electrical Works | – | 0.03% |
| | | | K. Ramesh | 9.35% | – |
| 2 | பாலாறு – ஓரிக்கை தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள நீர் ஊடுருவல் கிணறு எண்.1 க்கு குடிநீர் குழாய், கேபிள் மற்றும் மோட்டார் புதுப்பித்து இயக்கி தருதல் | 4.80 | M/S. Elango Electrical Works | – | 0.06% |
| | | | K. Ramesh | 10.48% | – |
| 3 | காஞ்சிபுரம் மாநகராட்சி – PSK தெரு HT கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள 75 HP Non Clog Sewerage Submersible Motor Pumpset – I சுழற்றி பழுதுநீக்கம் செய்து பொருத்தி இயக்கி தருதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 4.10 | M/S. Elango Electrical Works | – | 0.05% |
| | | | K. Ramesh | 9.76% | – |
| 4 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட கங்கை கொண்டான் நீரூந்து நிலையத்திற்கு 40HP Horizontal Squirrel Cage Induction Motor Auto Trasformer Starter Unit – II புதுப்பித்தல், பம்புகள் வால்வுகள் பழுதுநீக்கம் மற்றும் சர்வீஸ் பணிகள் மேற்கொள்ளுதல் இயக்கி தருதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 5.50 | M/S. Elango Electrical Works | – | 0.02% |
| | | | K. Ramesh | 5.72% | – |
| | **பொது நிதி** | | | | |
| 5 | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய தெரு மின்விளக்கு கன்ட்ரோல் சுவிட்சு பாக்ஸ் (Control Switch Box) பொருத்தி இயக்கி தருதல் | 9.50 | M/S. Elango Electrical Works | – | 0.06% |
| | | | K. Ramesh | 8.74% | – |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தபுள்ளி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1001/2022/இ1)

**தீர்மான எண். 562 அலுவலக குறிப்பின்படி அனுமதி வழங்கப்பட்டது.**

